# பிரபக்தியில் வெளிப்பட்டு நிற்கும் உள உணர்வு வெளிப்பாடுகள்: ஆழ்வார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு

**கஸ்தூரி.ச.**

**ஆய்வுச்சுருக்கம்:**

உலகிலுள்ள அனைத்து விலங்குகளினுள்ளும் ஆழமான உள உணர்வுகளைக் கொண் டமைந்ததும் அவ்வுணர்வுகளை வெளிப்படுத்தப் பலமுறைகளைக் கையாளும் விலங்கினமாகவும் மனித இனம் விளங்குகின்றது. பல்வேறு காலகட்டங்களில் பல நாகரிக மாற்றங்களுக்குட்பட்டு வந்த மனித இனம் தன் உணர்வுகளையும் தன் நாகரிக மாற்றத்திற்கேற்ப வெளிப்படுத்த எத்தனித்தது. இதன் வாயிலாகப் பிறந்த பல நாகரிக சமூகங்கள் இன்று உலகமெங்கிலும் பரவிக் காணப்படுகின்றன. அவ்வாறான உயரிய உளப்பான்மையோடு இறையியலையும் இணைத்துக் கொண்டு கட்டமைக்கப் பட்ட இந்துநாகரிகப் புலமானது உலகிலுள்ள நாகரிகங்கள் அனைத்தினுள்ளும் தனித்துவமானதாகத் திகழ்கின்றது. இந்துப்பண்பாட்டு உளவியல், ரிக்ஷிகளினதும் நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் ஞானிகளினதும் சீர்திருத்தவாதிகளினதும் சமயப் பெரியார்களினதும் வாயிலாகப் பல்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அவற்றுள் ஆழ்வார்களது உள உணர்வு வெளிப்பாடுகள் பிரபக்தி மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டமைந்தன. அவர்கள் பக்தி பொதிந்த பாடல்களின் வாயிலாக இறைவனுக்கும் பக்தனுக்குமான உறவைப் பல்வேறு உறவு முறைகளின் அடிப்படையில் வெளிப்படுத்தி மக்களை இறைவன்பால் அன்புகொள்ளச் செய்வதற் கான அடிப்படைகளை மேற்கொண்டார்கள். அவை பல பாவ முறைகளின் வாயிலாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அப்பக்தியில் நிறைந்துள்ள மன உணர்வுகளை ஆய்வு செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. ஆண்டாள், பெரியாழ்வார், பொய்கையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரது பாடல்களில் வெளிப்பட்டு நிற்கும் மன உணர்வுகளை மையப்படுத்தியதாக இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான பாடல்களில் காணப்படும் உணர்வு வெளிப்பாடுகளை அறிந்து கொள்ள இலக்கிய விபரண ஆய்வு முறையியலாகக் கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான முதன்மை மூலங்களாக மேற்குறித்த ஆழ்வார்களின் பாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, துணை மூலங்களாக இதனோடு தொடர்புடையதாக வெளிவந்த ஏனைய நூல்களும் கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆழ்வார்களின் உணர்வின் அடிப்படையிலான அன்பில் வெளிப்பட்டு நிற்கும் பக்தியைப் பதிவு செய்தலை இவ்வாய்வு முக்கிய நோக்கமாகக் கொண்டு நகர்த்திச் செல்லப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** பிரபக்தி, உள உணர்வு, பாசுரங்கள், ஆழ்வார், அன்பு

warankasthuri1284@gmail.com